தமிழக சட்டசபையில்

ஆங்கிலத்தில் பேசிய அமைச்சர்கள்

கருணாநிதி எதிர்ப்பு

சென்னை, ஜூலை 20-

தமிழக சட்டசபையில், அமைச்சர்கள் ஆங்கிலத்தில் பேசியதற்கு, முதல்-அமைச்சர் கருணாநிதி எதிர்ப்பு தெரிவித்தார்.

கவ'ன ஈர்ப்பு தீர்மானம்

திருவண்ணாமலை கோவில் மண்டபம் தீவிபத்தில் சேதம் அடைந்த சம்பவம் பற்றிய சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்தை பெசுதிருவேங்கடன் (தி.முக.) சட்டசபை கூட்டத்தில் கொண்டு வந்தார்.

அப்போது முதல்-அமைச்சர் கருணாநிதி குறுக்கிட்டு, "கவன ஈர்ப்பு தீர்மானம் என்பது அரசின் கவனத்துக்கு பிரச்சினையை கொண்டு வருவதுதான். அதை விட்டுவிட்டு, நீண்ட நேரம் விவாதிப்பது சரியாக இருக்காது" என்று கூறினார்.

ஆங்கில பேச்சு

உடனே தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர் ஞான சேகரன் எழுந்து, "சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்துக்கு அது பொருந்தாது" என்றார்.

இதைத் தொடர்ந்து அமைச்சர்கள் துரைமுருகன், ரகுமான் கான், சபாநாயகர் பழனி வேல்ராஜன் ஆகியோருக்கிடையே விவாதம் நடந்தது. இந்த விவாதத்தில் அவர்கள் ஆங்கிலத்திலேயே பேசினார்கள்.

கருணாநிதி எதிர்ப்பு

இதற்கு முதல்-அமைச்சர் கருணாநிதி எதிர்ப்பு தெரிவித்தார்.

"தமிழ் வளர்ச்சிக்கு என்று ஒரு அமைச்சகத்தை உருவாக்கி விட்டு இங்கே அமைச்சர்கள் தங்களுக்கு ஆங்கிலம் தெரியும் என்பதற்காக இப்படி பேசுவது சரியல்ல' என்று அவர் கூறினார்.